விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 அடி 10 ஷவ்வா 25 இதழ் 161
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-7-84


## ''வடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் வாபஸ் பெறவேண்டும்!'

### தமிழக அமைச்சர் கோரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு வற்புறுத்த வேண்டுமென்று தமிழக உணவு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் கோரியுள்ளார்.

நேற்று தமிழகப் பத்திரிகையாளர்களை அவர் சந்தித்துப் பேசியபோது, இலங்கையில் மாநில சுயாட்சி அமையவேண்டும் என்றும் அதன்மூலம் இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்த்துகொள்ளலாமென்றும் அவர் தெரிவித்தார்.

ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கும் தமது அஞ்சலியைச் செலுத்துவார்.

# கூட்டணி உண்ணுவிரதம்:

# இளைஞர்களின் குறுக்கீடுகளினுல் இடைநிறுத்தம்!

## இளைஞர்களின் கேள்விக்கு சிவா - சம்பந்தன் பதில்

(கா. யோகநாதன் - ஏ. வி. மாணிக்கம்)

**ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்த தமிழர்களுக்கும், வெலிக்கடைச் சிறையில் படுகொலையுண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் நேற்றுக் காலை 7-05 மணிக்கு ஆரம்பித்த உண்ணுவிரதப் போராட்டம் இளைஞர்களின் குறுக்கீடுகளினுல் பிற்பகல் மூன்று மணியளவில் இடைநிறுத்தப்பட்டது.**

தமிழர் விடுதலை கூட்டணியினர் நேற்று நடத்திய உண்ணுவிரதத்தை இடைநடுவில் நிறுத்தச் செய்வதற்கு நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் பல்வேறுவழிகளிலும் முயற்சி எடுத்தனர். கூட்டணி தலைவர்கள் திரு. எம் சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட சுமார் 8 பேர் கடைசிவரை இருந்தஇடத்தை விட்டு அசையாமல் உண்ணுவிரதத்தை நடத்தினுர்கள்.

உண்ணுவிரதம் நடந்து கொண்டிருந்த போது, காலை 10 மணிமுதல் இளைஞர்கள் கோவில் முன்றலில் நாலாபக்கங்களிலிருந்தும் கூடத்தொடங்கினுர்கள். அப்பொழுது ஏதோ நடக்கப்போகிறதென்று எதிர்பார்க்கப்பட்டது.

### உண்ணுவிரதிகளின் மத்தியில் இளைஞர்

காலையில் 7-05 மணிக்கு உண்ணுவிரதத்தை ஆரம்பித்த 12 பேரில் இரு இளைஞரும் இருந்தனர். பின்னர், வேறு சில இளைஞர்களும் வந்து சேர்ந்து அங்குமிங்குமாக உண்ணுவிரதிகள் மத்தியில் அமர்ந்திருந்தனர்.

காலை 11 மணிக்கு, இரு இளைஞர்கள் சோற்றுப் பார்சல்களை கொண்டுவந்து, உண்ணுவிரதம் இருந்து கொண்டிருந்தஇளைஞர்களுக்கு கொடுத்தபோது அவர்கள், தங்களுக்கு முன்னுல் பார்சலை அவிழ்த்து சாப்பிட தொடங்கினுர்கள். இதைத் தொடர்ந்து மற்றும் உண்ணுவிரதம் இருந்த கூட்டணி தலைவர்களையும் சாப்பிடுமாறு வற்புறுத்தியபோது அவர்கள் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தனர், பிளாஸ்டிக் கொள்கலனில் தண்ணீரும் கொண்டு வந்துஇளைஞர்களுக்கு கொடுத்தார்கள்.

இச்சமயம், சுமார் 300க்கு மேற்பட்ட இளைஞர்கள் உண்ணுவிரதம் இருந்த ஆலய தீர்த்த மண்டபத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு உண்ணுவிரதத்தை நிறுத்துங்கள் மாதக்கணக்கில் உணவின்றி அலைகிறோம் நாங்கள்' என்று சொன்னுர்கள்.

காலை 8 மணிக்கு 100 பேராக இருந்த உண்ணுவிரதிகளில் ஒரு பகுதியினர் எழுந்து வேறு மூலையில் அமர்ந்தனர் மற்றும் சிலர் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டனர்.

### அசையாமல் இருந்தனர்

திரு அ.அமிர்தலிங்கம், திரு எம். சிவசிதம்பரம், சட்டத்தரணி எஸ். பொன்னையா, திரு எஸ். ஸ்பீரியல், திரு வி. மாணிக்கவாசகர், திரு அலோ

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பஸ்களுக்கு கல்வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று தனியார் பஸ் சேவைகள் நடைபெறவில்லை.

போக்குவரத்துச்சபை பஸ்கள் சேவையிலீடுபட்டன. அங்குமிங்குமாக பஸ்களுக்குக் கல் வீசப்பட்டன.

மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்கும், கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்கும் பஸ்சேவை நடைபெற்றபோதிலும்நான்கு ஐந்து பஸ்கள் ஒன்ருகவே சேவையிலீடுபட்டன. இவைகளுக்கு முன்னுல் ஒரு ஜீப்பும், பின்னுல் ஒரு ஜீப்பும் பாதுகாப்புக்காகச் சென்றன.

மட்டக்களப்பில் பல இடங்களில் ஹர்த்தால் சுவரொட்டிகளும், அஞ்சலி தெரிவிக்கும் சுவரொட்டிகளும் காணப்பட்டன.

சில இளைஞர்கள் விசாரணைக்காக ஆயுதப்படையினரால் நேற்றுக்கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

## மட்டு.நகரில் நேற்று ரூ 69 ஆயிரம் கொள்ளை!

(மட்டக்களப்பு நிருபர் இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு 'பாட்டா' மொத்த விற்பனவு நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு 69 ஆயிரம் ரூபா துப்பாக்கிமுனையில் இனந்தெரியாத இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## "கூட்டணி நிலைமையில் இணக்கத்திற்கு இடமில்லை"

### சர்வகட்சி மாநாட்டில் ஜனதிபதி விளக்கம்

(கொழும்பு)

''தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலைமை சாத்தியமான இணக்கத்திற்கு இடமில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறது பிரதேச சபைகளுக்கு குறைந்ததில்லையெனும் நிலையை எதிரான நிலையினர் ஏற்றுக கொள்ளத்தக்கதாக ஒரு விதிவிலக்கு உட்படுத்த முடியாது-''

சர்வகட்சி மகாநாட்டுக்கு, மகா கட்சி தலைவரான ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கையளித்த விளக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதிபதியின் விளக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்ட முழு விபரம் பின்வருமாறு;-

''ஒரு புறம் மாவட்ட சபைகளுக்கு மேல் இல்லை. மறுபுறம் பிரதேச் சபைகளுக்கு குறைந்ததில்லை என்று இரு சாரார் கொண்டுள்ள முரண்பட்டவையும், வெளித்தோற்றத்திற்கு நெகிழ்ச்சி அற்றதுமான இரு நிலைப்பாடுகள் காரணமாக இப்போது முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. ஆகவே இவ்விரு நிலைமைகளுக்குஇடைப்பட்ட ஒரு பாலமாக இரண்டாவது மன்றம் பற்றி பிரேரணை கொண்டு வருவது அவசியமாகின்றது. ஒவ்வொரு சாராரினதும் அடிப்படையான நிலைமைக்கு இப்பிரேரணை ஊறுவிளைவிக்கின்றது.

''தர்க்கரீதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைமை, சாத்தியமான இணக்கத்திற்கு இடமில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றது பிரதேச சபைகளுக்கு குறைந்ததில்லையெனும் நிலையை எதிரான நிலையினர் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக ஒரு விதிவிலக்கு உட்படுத்த முடியாது. ஆனுல் மறுபுறம் மாவட்ட சபையே வேண்டும் என்னும் நிலையை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப உண்மையில் இடமளிக்குமிடத்து (பரந்தளவில் மாகாண அல்லது பிரதேச அமைப்பை உருவாக்கவே) மாவட்ட அடிப்படையிலும் பரந்த அளவில் தேவையான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செய்யப்படும் ஒன்றிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட விதிவிலக்குகளுடன் இணக்கப்படுத்த முடியும் எனவே தற்கரீதியான இணக்கப்பாடு யாதெனில் மாவட்டசபை மாத்திரமே அமைப்பு மட்டத்தில் உப

(8ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் இரு சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிவடக்குச் சந்தியில் இருமின்கம்பத்தில் இருவரின் சடலங்கள் தொங்கவிடப்படடிருந்தன.

நீர்வேலியைச் சேர்ந்த அம்பலவாணர் கந்தையா (65 வயது) வில்சன் (45 வயது) ஆகிய இருவரின் சடலங்களுமே தொங்கவிடப்பட்டிருந்தன.

இருசடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

நீர்வேலி கிராமசேவையாளர் இரு சடலங்களையும் பொறுப்பேற்று, யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் கொண்டுவந்துசேர்த்தார்.

(மா)

## "உலகுக்குக் காட்டவே உண்ணுவிரதம்!"

### இளைஞர்களுக்கு 'அமிர்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''ஜனதிபதி உலகநாடுகளில் மேற்கொண்ட விஜயத்தின்போது, தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்த பிரச்சாரங்களை முறியடிக்கவும், தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கம் செய்து வரும் அனர்த்தங்களை உலகுக்கு எடுத்துக் காட்டவுமே இந்த உண்ணுவிரதப் போரட்டத்தைநடத்தினேம்'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமும் முன்னுள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் நேற்று இங்கு நடைபெற்ற உண்ணுவிரதத்தின் போது பேசுகையில் தெரிவித்தார்,

திரு அமிர்தலிங்கம் பேச எழுந்தபொழுதே இளைஞர்கள் கூட்டமாகச் சுற்றி வளைத்து நின்று கேள்விகள் கேட்டு குறுக்கீடுகள் செய்தனர்.

வீரமாகாளி அம்மன் ஆலய தீர்த்தக்கேணி மண்டபத்தில் தலைவர் திரு எம், சிவசிதம்பரம் தலைமையில் இவ்வுண்ணுவிரதம் நடைபெற்றது.

பிற்பகல் சுமார் 3மணியளவில் திருமலை முன்னுள் எம்.பி திரு இரா. சம்பந்தன் எழுந்து இளைஞர்களின் உணர்ச்சிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

**FOR SALE**

Household Articles including Piano, Refrigrator, Sewing Machine and Furniture for quick sale. Call at 518, Navalar Road, Jaffna. 1057

**RENT**

4 Bed Roomed house with spacious compound available for Immediate letting out. Please call at 518, Navalar Road, Jaffna. 1056

## தவறிவிட்டதா?

ஒரு பணப்பை Money Purse) எங்கள் ஸ்தாபனத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரிமையாளர் தக்க விபரங்களைக் கொடுத்து முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளவும். யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம், கிளை— பருத்தித்துறை. 1053

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப் பொருட்கள் பியானோ, குளிர்சாதனப் பெட்டி, தையல் மெசின், தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு: தொடர்பு; 518, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1059

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும், பரந்த நிலப்பரப்பைக் கொண்ட 4 படுக்கை அறைகளைக்கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 518, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1058

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், பி.ஏ. தம்பி ஒழுங்கை, 2, தில்லைநாதன் சிவநாதன் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

தில்லைநாதன் சிவநாதன் கைம்பெண் சிவானுகூலம், 2, பி. ஏ. தம்பி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

வழ. இல.
தத்துவம்/3705

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேல் காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாத சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 28-ம் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

காரணம் காட்டும் திகதி 27-7-1984-க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி
1061

வவனியா பெரியதம்பனையில்——

# உலகவங்கி உதவியுடன் புதிய உரக்களஞ்சியம்

(வவனியா)

வவனியா பெரியதம்பனையில் உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட உரக்களஞ்சியத்தினை திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளரும் வவனியா மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட இயக்குனருமான கலாநிதி எஸ். குணசிங்கம் திறந்து வைத்தார்.

வவனியாவுக்கு விஜயம் செய்த கலாநிதி குணசிங்கம் இங்கு கச்சேரியில் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

வவனியாப் பகுதியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைபெறும் திட்டங்களில் 90 வீதமானவை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நல்ல முறையில் திட்டங்கள் நடைபெறுவதாகவும் இங்கு தெரிவித்தார்.

துணுக்காய், பூவரசன்குளம் வீதி திருத்தும் வேலைகளையும் நேரில் சென்று கவனித்தார்.

பூவரசன்குளம் மக்கள் கமநலச் சேவை நிலையத்திற்கு செட்டிக்குளம் செல்ல வேண்டியுள்ளது. இதனைத் தவிர்க்க பூவரசன்குளத்திலே ஒரு கமநலச் சேவை அலுவலகம் கட்டித் தரும்படி அப்பகுதி விவசாய மக்கள் கலாநிதி குணசிங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட அவர் உலக வங்கியின் நிதியில் பூவரசன் குளத்தில் ஒரு நிரந்தர கமநல சேவைக் கட்டிடம் அமைக்கப்படுமென உறுதியளித்தார்.

தற்போதைக்கு நடமாடும் கமநலச் சேவை நிலையம் பூவரசன்குளத்தில் இயங்குமெனவும் தெரிவித்தார்.

# திருகோணமலை மக்களுக்கு விரைவில் குழாய்நீர்!

(திருகோணமலை)

கந்தளாய்- திருகோணமலை குழாய்நீர் விநியோகத் திட்டத்தின்கீழ் திருகோணமலை நகரமக்களுக்கு குழாய்நீர் கிடைக்கும் வாய்ப்பு பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நீர் விநியோகத் திட்டம் 1984 பெப்ரவரியில் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டும் இன்னும் சில மக்களுக்கு குழாய்நீர் விநியோகஞ் செய்யப்படவில்லை.

முன்னர் நடைமுறையில் இருந்த கல்முட்டியான் குளத்திட்டத்தின்கீழ்தான் நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

# ''ஆசிரியர்களை உற்சாகத்தோடு பணியாற்றச்செய்யவேண்டும்'

## கிளிநொச்சியில் இ. த. ஆ. சங்கநிதிச்செயலாளர்

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி வளர்ந்து வரும் பிரதேசம். இங்கு இப்போது ஏற்படுத்தப்படும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஏற்ற வகையில் கல்வி அமையவேண்டும். இப்போது கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்பட்டு, பிரத்தியேகமான கல்விஇலாகாவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி செய்த தவப்பயனால் மந்திரிகளாலும் மக்களாலும் பாராட்டப்பட்ட ஒருவர் அரசாங்க அதிபராக வந்திருக்கிறார். அதேபோன்று கல்விப்பணியை நன்குசெய்த கிளிநொச்சியை நன்குணர்ந்த ஒரு கல்விமான் வித்தியாதிபதியாகக் கிடைத்துள்ளார். இவர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதன் மூலம் ஆசிரியர்களை விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் கல்விப்பணியில் ஈடுபடச் செய்யவேண்டும்.''

இவ்வாறு கிளிநொச்சி புனிததிரேசா மகளிர் மகா வித்தியாலயத்தில் திரு. நா. பொன்.சபாபதி தலைமையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கிளிநொச்சிக் கிளையின்வருடாந்தக் கூட்டத்தில் சங்க நிதிச் செயலாளர் திரு. நா. சோதிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்குப் பிரச்னைகள் உண்டு. இப்போது நியமனம் பெறுகின்றவர்கள் அநேகமானோர் பெண்களாக இருப்பதால் மேலும் பல சிக்கல்கள் உருவாகின்றன. இவ்வூர் ஆசிரியர்கள் இங்குள்ள தனவந்தர்களைப் பிடித்து இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் மேலும் அரச ஊழியர் குடியிருப்புகளை அல்லது ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளை அரசாங்க அதிபரின் உதவியைப் பெற்றோ அல்லது ஊராட்சி மன்றங்களின் மூலமோ ஏற்படுத்த வேண்டும்.''

''நியாயமான விலையிலும் கௌரவமான முறையிலும் உணவருந்தக் கூடிய சாப்பாட்டுக்கடைகள் இங்கு குறைவு. ஆசிரியர்கள் பெரியபங்கெடுக்கின்ற கூட்டுறவுத்துறையினர் இம்முயற்சியில் ஈடுபடவேண்டும். அரச ஊழியர்களில் கூடுதலான தொகையினர் ஆசிரியர்களாக இருப்பதாலும் இவ்வாசிரியர்களில் கணிசமான அளவினர் உள்ளூர் வாசிகளாக இருப்பதாலும் அரச ஊழியர்களின் நலனோம்பும் சேவைகளில் ஆசிரியர்கள் ஈடுபடவேண்டும்.''

இக்கூட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மா. சண்முகநாதன், மாவட்டச் செயலாளர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கம், அருட்திரு. மதுரநாயகம், வே கதிரவேலு ஆகியோரும் பேசினர்.

பம்பலப்பிட்டி

# கொலை வழக்கு எதிரிகள் விடுதலை

[கொழும்பு]

பம்பலப்பிட்டி கொலை வழக்கில், விசாரணை முடிவில் இரு எதிரிகளையும் கல்கிசை நீதவான் திரு. நளின் பெரேரா விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் 1982 மே. 31-ம் தேதி இரவு எரிக் விக்கிரமசிங்க, சுதர்சி வீரசேகரா ஆகியோர், மஜெஸ்டி தியேட்டர் ஊழியரான டபிள்யூ. ஏ. ரத்னசிறியைப் பம்பலப்பிட்டியில் வைத்துக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்], சட்டத்தரணி றொட்னி பெரேரா, சட்டத்தரணி கிறிஸ் தர்மதிலகா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

# முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடந்த சங்கீத-நடன-நாடகப் போட்டியில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி இரஜனி-இராஜரட்ணம் கிராமிய நடனத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார். இப் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதே பாடசாலை மாணவிகள் கர்நாடக இசைக்குழுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.


# பணம் வேண்டுமா?

உங்கள் தங்க நகைகளுக்கும்
காணிகளுக்கும் பணம் தேவையா??

**த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட்**

249, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

# பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டிருக்கும் வகுப்புகட்கு இன்னும் சில வெற்றிடங்கள் உள்ளன.

இவ்வகுப்புகள் 1-8-1984-ல், ஆரம்பமாகும்.

- மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- கொம்பியூட்டர் புரோகிராமிங் (COMPUTER PROGRAMMING)
- படம் வரைதல்– பில்டர்ஸ் குவாண்ரிற்றீஸ் உட்பட (DRAUGHTSMANSHIP- INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)
- றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)
- மின்இணைப்பு (ELECTRICAL WIRING)
- நீர் குழாய் இணைப்பு (PLUMBING)

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்,

28-07-84க்கு முன் விண்ணப்பித்து, ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

பதிவாளர்


**பற்றீசியன்இன்ஸ்ரிரியூட்ஸ்**

59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## திரு. தாமு கந்தையா

மலர்வு: 12-12-1939 உதிர்வு: 25-07-83



எங்கள் நிலையத்தின் உயிரான உடன் பிறப்பே எங்கள் இதயத்தின் ஒளியான மணிவிளக்கே நாங்கள் சுகம் காணவேண்டும் என்று சுமைதாங்கியாய்இருந்தாய். இன்று சுகமேதும் காணுமல் செம்மலே எங்கு சென்றாய் நீ வீரத்தின் இலக்கணமே விவேகத்தின் சமுத்திரமே நீ மறைந்து ஓர் ஆண்டு ஆனாலும்- நின் நினைவலைகள் ஓயாது எங்களது நெஞ்சங்களில்

நின் ஆத்மா சாந்தியடைக

**மகாத்மாஜீ சனசமூக நிலையம்**
**புத்தூர்.**

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

1029

# பயங்கரவாத நடவடிக்கைப் பிரதேசமாக பஞ்சாப் பிரகடனம்!

## விசேட நீதிமன்றங்கள் அமைப்பு!

புதுடில்லி, ஜூலை, 24

பஞ்சாப் மாநிலம் பயங்கரவாத நடவடிக்கைப் பிரதேசமாக இந்திய அரசாங்கத்தினால் நேற்றுப் பிரகடனப்படுத்தப் பட்டது. ங்கு கைது செய்யப்பட்ட தீவிரவாத சீக்கியர்களை விசாரிக்கவென மூன்று விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் இந்திய அரசுக்கெதிரான பயமுறுத்தல் வேலைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன. பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து கடந்த சில தினங்களில் குழப்பம் விளைவிப்போர் எனச் சந்தேகிக்கப்பட்ட சிலர் கைதாகினர். ஆயுதங்கள், வெடி மருந்துகள் என்பனவும் மறைவிடங்களிலிருந்து கைப்பற்றப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று விசேட நீதிமன்றங்களும் ஜலந்தர், பட்டியாலா, பிரோஸ்பூர் ஆகிய பிரதான பஞ்சாப் நகரங்களில் நிறுவப் படும். இவை இந்நகரங்களை அண்டிய பகுதிகளில் நிகழ்ந்த குற்றச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தும்.

கடந்த ஜூன் மாதம் 'பொற்கோயில்' இராணுவ முற்றுகையின்போது 5000 சீக்கிய தீவிரவாதிகள் பாதுகாப்புப் படைகளால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் மூவாயிரம்பேர் விசாரணைகளின் பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர். எஞ்சியவர்கள் மீதே நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பஞ்சாப் சம்பவங்களை விசாரிக்கவுள்ள மூன்று விசேட நீதிமன்றங்களும் ஆறு மாதங்களில் தமது முடிவுகளை அறிவிக்கும்.

இது இவ்வாறிருக்க 'பொற்கோயில்' திருத்த வேலைகள் பாபா சாந்தாசிங் என்ற சீக்கிய மதத் தலைவர் தலைமையில் தொடர்ந்து நடைபெறுகிறது. இவ்வேலைகளின் சில பகுதிகள் பொறியியலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிற்ப வேலைகளை மேற்கொள்ளவென ராஜஸ்தான்மாநிலத்திலிருந்து சிற்பக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். (கி)

### ரூ. 2 லட்சம் கசெட்டுகள் சிக்கின

(சென்னை)

நாகபட்டினம் பட்டுக்கோட்டையிலுள்ள பண்ணை வயலில்புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 லட்சம் ரூபா பெறுமதியான 13 கடத்தல் வீடியோ கசெட்டுகளை சென்னை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (வெ)

### பிரிட்டனில்

## துறைமுகத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்!

லண்டன், ஜூலை 24

பன்னிரண்டு தினங்களாக இடம்பெற்ற பிரிட்டன் துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முடிவடைந்தது.

துறைமுகத் தொழிற்சங்கத் தலைவர்கள் புதிய சமாதானத் திட்டமொன்றை அறிவித்ததைத் தொடர்ந்தே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட சுமார் 36 ஆயிரம் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

இதனைத் தொடர்ந்து டோவர், வெலிக்ஸ்ரோஸ் போன்ற பிரிட்டனின் பெரிய துறைமுகங்கள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

டோவர் துறைமுகத்தில் கடந்த வியாழக்கிழமையே தொழிலாளர்கள் வேலைக்குத்

(7ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் பொதுத்தேர்தல் தொழிற்கட்சி முன்னணியில்!

ரெல்அவிவ், ஜூலை 24

இஸ்ரேலியப் பொதுத்தேர்தலில் ஆளுங் கட்சியான லிகுட் கட்சிக்கும், பிரதான எதிர்க் கட்சியான தொழிற்கட்சிக்கும் இடையே கடும்போட்டி நிலவுகின்றது.

120 ஆசனங்களைக் கொண்ட 'நஸட்' என்ற இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் தொழிற் கட்சி 46 ஆசனங்களையும், லிகுட் கட்சி 42 ஆசனங்களையும் கைப்பற்றுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இப்பொதுத் தேர்தலில் 26 கட்சிகள் போட்டியிடுகின்றன. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் திரு. மெனச்சம் பெகின் பிரதம மந்திரிப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார். இதனைத் தொடர்ந்து ஆளும் லிகுட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான திரு. யிட்ஷாக் ஷமீர் புதிய பிரதமரானார்.

(5ம் பக்கம் பார்க்க)

## ★ ஒலிம்பிக் செய்திகள்

### கூரைமீது துப்பாக்கி வீரர்கள்

லாஸ் ஏஞ்சல்ஸில் ஒலிம்பிக் வீரர்கள் தங்குவதற்கு இரு விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒருசிறு அனர்த்தமேனும் நேர்ந்துவிடக்கூடாதெனப் பாதுகாப்பதிகாரிகள் இவ்விடுதிகள் மீது பலத்த கண்காணிப்புச் செலுத்துகின்றனர். இக்கண்காணிப்பின் ஒரு அம்சமாக இவ்விடுதிகளின் கூரைகள் மீதும் குறிபார்த்துச்சுடும் பொலிஸ் துப்பாக்கி வீரர்கள் (Police Marksmen) இரவு பகலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இவ்விடுதிகளில் தங்கியிருக்கும் வெளிநாட்டு வீரர்களுக்கு இத்துப்பாக்கி வீரர்கள் கூரைமீது இருப்பது, வேடிக்கையாக இருக்கிறதாம்.

### புகைமண்டலப் பிரச்னை

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் தொழிற்சாலைகள் பலவற்றைக் கொண்டிருப்பது. இதனால் இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் 'புகை' இந்நகரத்தில் படர்ந்திருப்பது சாதாரண நிகழ்ச்சியாகும் ஆனால் இப்புகைமண்டலம், ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு இடையூறாக இருக்குமெனக் கருதப்படுகிறது. சில பந்தயத்திடல்கள் புகைமண்டலம் அதிகமாகவுள்ள பகுதிகளில் அமைந்துள்ளனவாம்.

எனவே லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் கமிட்டி இங்குள்ள தொழிற்சாலைகளிடம் அவை வெளியேற்றும் புகையைக் கட்டுப்படுத்தும்படி கேட்டுள்ளது.

இப்புகைமண்டலப்பிரச்னையை லாஸ்ஏஞ்சல்ஸ் வரும் சில நாடுகளும் உணர்ந்துள்ளன. பிரிட்டன் தனது வீரர்களின் நலன்கருதி அவசர தேவைக்கு 'ஒக்ஸிஜன்' கலன்களையும் கொண்டுவந்துள்ளது.

### சீனு அதிருப்தி

சோவியத்துடன் கருத்துவேற்றுமை கொண்ட கம்யூனிச நாடான சீனு போட்டிகளில் கலந்துகொள்கிறது. ஆயினும் லாஸ் ஏஞ்சல்ஸில் பூரண பாதுகாப்பு ஏற்படுத்தப்படவில்லையென்றே சீனுவும் குறிப்பிட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் லாஸ் ஏஞ்சல்ஸில் பாதுகாப்பு வசதிகள் பூரணமாக அமையவில்லை என்ற காரணத்தைக் காட்டியே சோவியத்யூனியனும் அதன் சார்பான கம்யூனிச நாடுகளும் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை. (கி-கு)


45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26%
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில் தனது
சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
த பினன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
TFC
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி: 23680
தலைமை அலுவலகம்
3-ம் மாடி,
சிலிங்கோ ஹவுஸ்,
கொழும்பு - 1.
மற்றும் ஏனைய
14 கிளைகள் உண்டு.



குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services(Pte) Ltd.
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No 22207 (C. T. S) C E
CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

- வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
- உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International Telecommunication Services
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II. MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040. 22065. Telex No: 22207 (C. T. S) C E

**மணிவாக்கு**

ஒருமனிதன் தனக்கென அமைத்துக்கொள்ளும் தரங்களைக் கொண்டே உலகம் அவனை மதிக்கிறது.

—மகாத்மாகாந்தி.

# நமது நோக்கு

## கண்ணீரைத் துடைப்போம்

பத்திரிகைகளில், குறிப்பாக எங்கள் நேற்றைய பத்திரிகையில் காணப்படும் ஓராண்டு நினைவஞ்சலியை வாசிப்பவர்கள்கண்ணீர்விடுவது இயற்கை.

'நல்லவர்கள் சாவதில்லை' என்று குறிப்பிட்ட வசனம் கல்லையும் உருக்கிப்பாயும் நல்லவர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதால் நாம் அவ்வாறு கூறுகின்றோம்.

கொன்றவர் யாராயிருந்தாலென்ன, கொல்லப்பட்டவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்றாலென்ன அரச ராணுவம் அப்பாவி மக்களைக் கொன்றதே என்பதால் நாம் இவ்வாறு கவலைப்படுகின்றோம். இவர்களுக்கு இரண்டு நிமிட அஞ்சலி என்செயும்? இந்த வரிசையில் இன்னும் பல தேதிகளில், இவ்வித கொடுமைகளை நினைவுபடுத்தும் செய்தி வரவிருக்கின்றது.

இதற்கு இவ்விரண்டு நிமிட அஞ்சலி பரிகாரமென்று எவரும் நினைத்ததாக நாம் கருதவில்லை.

ஒருநாட்டின் ஆட்சி அந்நாட்டு மக்களைக் கைதூக்கி விட்டு அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகவே நிறுவப்படுகிறது. காவற்படையும் ராணுவமும் நாட்டு மக்களைப்பாதுகாப்பதற்கே திரட்டப்படுகின்றன.

இன்றைய தினத்தில் இதற்கு முற்றிலும் மாறாக காக்கவேண்டியவர்கள் அழிப்பதும், காக்கப்படவேண்டியவர்கள் அழிக்கப்படுதும் நினைவுக்கு வருகிறது. இதற்கு மாற்று மருந்தென்ன என்பது சிந்திக்கத்தக்கது.

இதனைக்கண்டித்து இத்தகைய அட்டூழியங்கள் எக்காலத்திலும் நடைபெறுது தடுக்க மக்கள் சபதம்செய்ய வேண்டிய தினம் இது.

பலியானவர்கள் ஒருகுறிப்பிட்ட இனத்தவரென்பதால், நாட்டில் ஒரு இனக்கலவரம் ஏற்பட்டதால், உயிரிழந்தவர்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இனத்தவரென்பதால் இன்றைய தினத்தின் ஆழமான கருத்து அமிழ்ந்துவிடுவதா?

மக்கள் சக்தியே மகேஸ்வரன் சக்தியென்பதிலேயே ஜனநாயக ஆட்சி பலமடைகிறது.

இவ்வித சக்தி ஒரு நாட்டில் மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. இன்றைய உலகில் அது சர்வதேச இயக்கமாக வளர்கின்றது. எந்த ஒரு வல்லரசையும் அண்டி நின்றால் நாம் எவ்வாறும் நடக்கலாமென்று எந்த ஒரு நாடும் நினைப்பது மிக ஆபத்தானது.

சர்வதேச மன்னிப்புச் சபை இந்த நாட்டின் ஆட்சிக்குப் பிடிப்பில்லாதிருக்கலாம். அச்சபை சொல்வதெல்லாம் நூற்றுக்கு நூறு சரியென்றும் நாம் கொள்ளவில்லை. இருப்பினும் கடந்த மாதம் 18ம் திகதி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு அப்பாவி மக்களை நாட்டின் காவற்படை திட்டமிட்டுக் கொலைசெய்வதைத் தடுக்கும்படி கேட்டிருக்கிறது. நியாயமல்லவா?

உலகில் இத்தகைய விசனம் உண்டானபோதும் இந்நாட்டுத் தமிழ் மக்களின் விமோசனம் அவர்களின் ஒற்றுமைபட்ட சக்தியிலே தங்கியிருக்கின்றது. இன்றைய ஹர்த்தால் இதனை வலியுறுத்தவேண்டும்.

பொறுமையிழந்த இளைஞர் போரில் நம்பிக்கை கொண்டதும் அவர்களின் வன்செயல்களைத் தடுக்க எழுந்த அரச நடவடிக்கைகள் பயங்கரவாதமென்ற நச்சுப் பாம்பை உருவாக்கினதும் நாடறிந்த உண்மை.

இன்று இதற்கெல்லாம் மூலகாரணமான தமிழர் பிரச்னை மழுப்பப்பட்டு, பயங்கரவாதமே ஆட்சியின் முக்கிய பிரச்னையாய்விட்டது.

ஒரு நாட்டின் ஒரு பகுதியில் உதயமாகும் குழப்பம் தேசிய ரீதியில் பருத்துவிடுவதால் அதன் விளைவு தொடக்கத்தில் போதுமான தீர்வுக்கு அப்பால் சென்றுவிடுவது உலக வரலாற்றின் பாடம்!

ஹிட்லர் உலகை அடக்கி ஆளவேண்டுமென்று போரைத் தொடங்கியிருக்கமாட்டார். ஐரோப்பாவில் ஜெர்மனியின் பெருமையை மீட்க நினைத்தாரென்று நம்பலாம். அதற்கு இடமளித்த ஒரு உலக யுத்தம் உலகை எவ்வாறு மாற்றிவிட்டது?

இந்த நாட்டில் இன்று நடைபெறுவது தமிழ் மக்களின் உரிமைப் போர் எனலாம். இது நாம் கற்பனை செய்ய முடியாத சிக்கலை உண்டாக்கிவிடலாம்.

தமிழ் இளைஞர்களின் தீவிரவாதம் இனப் பகைமையினால் அரசின் கண்ணுக்குத் தப்பான விளக்கத்தைக் கொடுக்கின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் இன்று ஆட்சியில்லையென்று எல்லோரும் ஒத்துக்கொள்ளும்போது அதுவே தீர்க்கப்படவேண்டிய விடயம்.

அதற்கொரு தீர்வென்றால் அகில இலங்கைக்கும் ஒரு ஆட்சிமுறை தேடுவது அரசியல் விபரீதமல்லவா?

இன்று நாம் கண்ணீர் விடுவது போதாது எமது இளைஞரை நல்வழிப்படுத்த, அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக, மற்றவரின் கண்ணீர் துடைக்க முன்வர வேண்டும்.

---

## கதிர்காமக்கந்தன்

குன்றில் அமர்கோன் கதிர்காமத் தேவா நீ  
இன்றேல் என்னுக்கும் இவ்வுலகு தத்துவனே  
நன்றே விழைந்தேன் நாமத்தைச்  
சொல்லி என்னுள்  
நின்றே வழிநடத்து நமச்சிவா யப்பொருளே

— மணிமன்றன்

---

பாராளுமன்றத்தில் கடந்தவாரம் — இ. கந்தசாமி

# கண்டியில் ஒரு நீதி கொழும்பில் ஒரு நீதியா?

''மட்டக்களப்பில் பல்கலைக் கழக கல்லூரியில் சிங்களமாணவர்களுக்கு போதிய பாதுகாப்பில்லை அவர்களைத் தென் இலங்கைக்கு மாற்றுமாறு கடந்த மாதம் நான் கேட்டபோது அங்கு போதிய பாதுகாப்பு உள்ளது என்று இங்கு பதில் தரப்பட்டுள்ளது. அதன் பின்னர்தானே திருமதி நிர்மலா நித்தியானந்தன் சிறை மீட்கப்பட்டார். உங்கள் பாதுகாப்பு இதுதானா? பத்தேகம எம். பி. யின் கேள்வி இது.

எதையுமே ஆணித்தரமாக எடுத்துரைக்கும் கம்யூனிஸ்ட் சரத் என்ன கூறுகிறார் பார்ப்போம்.

கொழும்பிலும் பேராதனையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் மரண விசாரணையை மாஜிஸ்ரேட் நீதவான்களே நடத்தினர். கொழும்பு விசாரணையில் தீர்ப்பும் வழங்கப்பட்டாயிற்று. பேராதனையில் தீர்ப்பு வழங்கப்படும் சமயம் தீர்ப்பு தமக்கு எதிராகவே இருக்கும் என பொலிசார் பயந்தனர். தீர்ப்பு வழங்க இருந்த தினத்தன்று அந்தநீதவானுக்கு அந்த விசாரணையை நடத்த முடியாதென்று ஆட்சேபனை தெரிவித்தனர். தீர்ப்பும் வழங்கப் படவில்லை

கண்டியில் ஒரு நீதி கொழும்பில் ஒரு நீதியா?

பல்கலைக்கழக அசம்பாவிதம் பற்றி சாரிக்க விசாரணைக் குழு நியமிப்பது நல்லது என பிரதமர் 4 எதிர்க்கட்சிகளிடம் கூறினர். இன்று ஜனாதிபதியோ விசாரணைக் குழு அவசியமில்லை என்கிறார்.

ஏன் விசாரணைக்குழு நியமிக்க பயப்படுகிறீர்கள் எதையோமறைக்க முயலுகிறீர்களா?

### தினேஷ் கிளப்பிய சர்ச்சை

பிரிவினைக்கு எதிராக அரசியல் அமைப்பையே திருத்தி சட்டம் கொண்டு வந்துவிட்டு அந்தச் சட்டத்தினால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கூட்டணியினர் கேட்டுக் கொண்டபடி வடக்கில் அரசு இடைத் தேர்தல்களை தற்போதைக்கு நடத்தவில்லை என்று கூறுகிறது. அரசு என்ன இரட்டை வேடம் போடுகிறதா?

இது தினேஷ் கிளப்பிய சர்ச்சை.

அலன் தம்பதிகள் கடத்தப்பட்ட போது திருமதி நிர்மலாவை நம்பி அவரது குரலை தொலைக்காட்சியிலும், வானொலியிலும் ஒலிபரப்பினீர்களே! இன்று அப்பெண்மணியே உங்களை ஏமாற்றி விட்டு சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார் என்றும் கூறினர் தினேஷ்.

தமிழ் தீவிரவாதிகள் மீதும் இந்தியா குறிப்பாகத் தமிழகம் மீதும் பார்த்தும் பாராமலும் வசை மாரிபொழிந்த பொலனறுவ மாவட்ட அமைச்சர் அரசுக்கு பின்வரும் ஆலாசனையையும் வழங்கினர்.

### பிரஜாவுரிமையை பறிக்கவும்

தமிழ்நாட்டிலிருந்து எமது நாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பயங்கரவாதிகளின் பிரஜாவுரிமையை அரசு பறிக்க வேண்டும். இதற்கு இப்போதிருக்கும் சட்ட விதிகள் போதுமானதாக இல்லாவிடின் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவரலாம்.

இலங்கையில் மனித உரிமைகள் நசுக்கப்படுவதாகக் கூறும் கிருஷ்ணஐயர். கருணாநிதி, நெடுமாறன் போன்றோர் தமிழ் நாட்டில் மனித உரிமைகள் நசுக்கப்படுவது பற்றி எதுவுமே கூறாது மௌனம் சாதிக்கிறார்கள் என்றும்கூறிய அவர், இலங்கைப் பத்திரிகைக்கும் ஆலோசனை ஒன்றை விடுத்தார்—

தமிழ் நாட்டில் மனித உரிகள் நசுக்கப்படுவதையும் திருமதி நித்தியானந்தன், உமாமகேஸ்வரன், பத்மநாபா போன்ற பயங்கரவாதிகள் உட்பட்ட யாழ்ப்பாண தமிழர்களின் துரோக நடவடிக்கைகளையும் எமது பத்திரிகைள் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

இலங்கை பயங்கரவாதிகளுக்கு தமிழ் நாட்டில் 'தனிநாட்டு சுதந்திரப் போராளிகள்'' பட்டம் சூட்டப்பட்டு அகதிகள் அந்தஸ்தும் வழங்கப்படுகிறது.

இலங்கையின் இனப் பிரச்னைக்கு நிரந்த அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் விடமாட்டார்கள். இப் பிரச்னையையே அவர்கள் தமது வங்குரோத்து அரசியல் வாபத்துக்காகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதனை உணர்ந்து கொள்ளாத மடையர்களான யாழ்ப்பாணத் தமிழர்கள் தம்மையே அவர்களிடம் அடகுவைத்து விட்டனர்.

''வயிற்றுவலியை நம்பினாலும் தென் இந்தியத் தமிழரை நம்பக்கூடாது'' என எமது முன்னைய காலத்து தமிழர்கள் கூறியதை தற்போது தமிழ்நாட்டில் இருக்கும் யாழ்ப்பாண புத்திஜீவிகளற்ற தமிழர்களும் இங்கு வடக்கு—கிழக்கிலுள்ள அவர்களது ஆதரவாளர்களும் மறந்துவிட்டனர்.

—இது தமிழ் மக்களுக்கு அவர் வழங்கிய ஆலோசனை.

இந்திய- இலங்கைக் காடுகளில் இருக்கும் புலிகள் மீதும் இவருக்கு அலாதி பிரியம் போலும்.

வடக்கின் பயங்கரவாதிகளை 'புலி' என்ற புனிதமான பெயர் கொண்டு அழைப்பது அது இந்திய இலங்கைக் காடுகளில் பேணிப் பாதுகாக்கப்படும் புலிகளுக்கு நாம் இழைக்கும் அநீதிக்கும் சமமாகும் என்றும் வேதனைக் குரல் எழுப்பினர் அவர்

இன்னுமொரு கட்டத்தில் கலவான சரத், வெங்காயம் விலை அதிகரித்த போதும் 'புலி'வந்துவிட்டது என்று கூறி மக்களை அரசு திசைதிருப்புகிறது என்றார் கிண்டலாக.

ஹமீட் உரையாற்றியபோது சரத்துடன் சிறு சொற்போர்—

ஹமீட்: எந்த ஒரு வெளிநாட்டினதும் கைப்பொம்மையாக நாம் இருக்க மாட்டோம்.

சரத்: ஏன் உங்களுக்குத் தெரியாமலே உங்கள் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதே. இஸ்ரேல் நிபுணர்களை இங்கு அழைக்கும் முடிவைக்கூட அமைச்சரவையில் உள்ள மூன்று அமைச்சர்களே எடுத்துள்ளார்கள். அதுபற்றி உங்களுக்குக் கூடத் தெரியாதே.

அரசதரப்பிலிருந்து ஒரு குரல்: அது கலவான உறுப்பினருக்கு எப்படித் தெரியும்.

சரத்: எனக்குத் தெரியும் —அது உண்மைதானே?

71-ம் ஆண்டுக்குப் பின் சுதந்திரக்கட்சி எமது இளைஞர்களை எதிரிகளாகவே கருதுகிறது, இளைஞர்களைப் பாதுகாப்பது எமது கடமை.

''பேராதனை பல்கலைக் கழக மாணவர் மரண விசாரணை ஒத்திப்போடப்பட்டது சட்ட விவகாரம். இதற்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை.

பல்கலைக்கழக அசம்பாவிதம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இரு பல்கலைக்கழக மாணவர்களும் 5 பாடசாலை மாணவர்களுமே தற்போது சிறையில் உள்ளனர். நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிறையில் இருப்பதாக எதிர்க்கட்சியினர் கூறுவது தவறு.

''விசாரணைகள் முடிவுற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.''—கல்வி அமைச்சரின் பதில்.

### வியாழனன்று சபையில்

பெண்கள் இரவு 10 மணிக்குப் பின்னரும் வேலை செய்வதால் அவர்களது குடும்பத்தில் கணவன் — மனைவி உறவு தாய் - பிள்ளை உறவு பெரிதும் பாதிக்கப்படும்.

— பத்தேகம எம். பி.

முதலாளித்துவ சமுதாயத்தில் பெண்கள் சிலரின் சுயநலத்துக்காகவே பயன் படுத்தப்படுகிறார்கள்.

— கலவான எம். பி.

ஒருபெண் கெட்ட நடத்தையில் ஈடுபட வேண்டுமானால் வீட்டுக்கு வெளியே போய்த் தான் கெட்டுப்போக வேண்டுமா? வீட்டுக்குள் இருந்து கொண்டு அறையைப்பூட்டிக் கொண்டு கெட்டுப் போக முடியாதா? சிங்களப் பெண்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கற்பைப் பாதுகாக்க என்றே பிறந்தவர்கள்.

— திவுலுப்பிட்டிய எம்.பி.

சுதந்திர வர்த்தக வலயத்திற்குச் சென்று பார்த்தால் அவர்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பது தெரியும் மல சல கூடத்திற்குக் கூட குறிப்பிட்ட நேரத்தில் தான் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

— மகரகம எம். பி

எமது அரசியல் அமைப்பிலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமான இடம் வழங்கப்பட்டிருக்கும் போது பெண்களுக்கு மட்டும் இரவில் வேலைவழங்க மறுப்பது பாரபட்சமாகாதா?

— கடுவல எம். பி.

எமது பெண்களுக்குத் தங்களைத்தாங்களே பாதுகாத்துக் கொள்ளக் கூடியவீரம் உண்டு எவரும் பயப்படத் தேவையில்லை.

— தொழில் அமைச்சர்

பாராளுமன்றத்தில் உள்ள எமக்கும் ஊழியர்களுக்கு இருக்கும் மானிய உணவு போக்குவரத்து மற்றும் மலசல கூட வசதிகள் வேலைசெய்யும்

(5ம் பக்கம் பார்க்க)

---

## நீர்வேலி நீலாயதாட்சி அம்மை

புவனமெலா மீன்றெடுத்த தாயே போற்றி  
புராதனியே பூரணியே புகலே போற்றி  
சிவனுருவிற் செம்பாக மானாய் போற்றி  
சிந்தனையிற் றேனூற நிற்பாய் போற்றி  
தவநெறியுந் தற்பதமும் தருவாய் போற்றி  
தாயாகித் தமியேனை வளர்த்தாய் போற்றி  
நவநிதியும் நாற்கலையும் பொலியும் நெல்லை  
நகருறையும் நீலாய தாட்சி போற்றி

-புலவர் வே. கனகசபாபதி

# ‘தமிழர் மத்தியில்சாதிப்பூசலை ஏற்படுத்த அமைச்சர் முயற்சி’

## அமிர்தலிங்கம் கண்டனம்

(ஏ- வி. மாணிக்கம்)

சமீபத்தில் நடந்த சில கொலைகளைக் காரணமாக வைத்துத் தமிழ் மக்கள் மத்தியில் சாதிப்பூசலை ஏற்படுத்தும் முயற்சி மிகவும் சிறுபிள்ளைத்தனமானது’ என்று, தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்க்ம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சமூகவிரோதிகள் என்ற போர்வையில் சிறுபான்மைத் தமிழர்கள் கொல்லப்படுகிறுர்கள் என்று அண்மைக்காலங்களில் வெளிவந்த அரச தரப்புச் செய்திகளுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பலர் ஆட்சேபனை தெரிவித்தார்கள்.

இதனைத்தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம். ‘ஈழநாடு’ பத்திரிகைக்கு விசேஷ அறிக்கையொன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையில் ‘சமூகவிரோதச். சக்திகள் என்ற காரணத்திறகாக, 60 பேர் வரை கொல்லப்பட்டிருக்கிறுர்கள் என்றும் 6-7 பேரே சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், அமைச்சரின் வாதம் எவ்வளவு அர்த்தமற்றதென்பது குறிப்பிட்ட எண்ணிக்கையிலிருந்தே எடுத்துக்காட்டுகிறதென்ரு.

தீவிரவாதத் தமிழ் இளைஞர் மத்தியில்சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறுர்கள் என்றும் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பல தீவிரவாதிகளில் சிறுபான்மைத் தமிழ் இளைஞர்களும் எத்தனையோ பேர் இருந்திருக்கிறுர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் மத்தியில் சாதிபேதத்திற்கே இடமில்லைஎன்று தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், இந்த அடிப்படையில் பிரித்தாளலாம் என்று அமைச்சர் நினைப்பது நிச்சயம் பலனளிக்காது என்றும் வலியுறுத்திஞர்.

அதேநேரம் தீவிரவாத இளைஞர்களுக்கும் திரு. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

‘‘பறித்த உயிரைத் திருப்பிக்கொடுக்க எவராலும் முடியாது. •வர்களுக்கும் குடும்பங்கள் உண்டென்பதை மறந்துவிடக் கூடாது.

‘‘பொலிசார் தமது கடமையைச் சரிவரச்செய்யாது-சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்த காரணத்தினுல்தான் இந்தநிலை ஏற்பட்டதென்ருலும் தவறிளைப்போரும் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து மனிதாபிமானத்தோடு செயல்படுவதே இனஒற்றுமையைக் காக்க வழி என்பதை மறந்துவிடக் கூடாது.’’ (மா)

## மனதை நிறைத்த பாடசாலை மாணவர் கைவண்ணம்!

கரும்பலகையில் வெண்கட்டியால் படம்கீறி பலமணித்தியாலங்களாக விளங்கப்படுத்தினுலும் மாணவர்களால் விளங்கிக் கொள்ள முடியாத பல உபகரணங்களை- மாதிரிப் பொருட்காட்சிகள் மூலம் மிக இலகுவாக மாணவர்களுக்கு விளங்க வைக்கமுடியும் என்பது கடந்தவாரம் இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் மீண்டும் ஒரு முறை நிருபணமாகியது.

மானிப்பாய் வட்டாரத்தில் உள்ள சுமார் நாற்பத்தெட்டு பாடசாலைகள், கல்லூரிகள், மகாவித்தியாலங்கள் பங்குகொண்டு நடத்திய ஒன்றிணைந்த பாடத்திட்ட உபகரண பொருட்காட்சியை இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் யாழ்.பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். தமிழ் மாணவர்களின் கைவண்ணம் அங்கே பலகோணங்களிலும் தெரிந்தது.அழகிய மலர்மாலைகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கண்காட்சி மண்டபத்தில் மலர்களின் மணத்தைவிட தமிழ் மணம் நிறைந்து காணப்பட்டது,

பாலர் பிரிவுக் கண்காட்சியில் பாவலன் பாரதி, மனிதகுலங்களின் வழிகாட்டியான தெய்வப்புலவன் திருவள்ளுவர், அகிம்சாமூர்த்தி மகாத்மாகாந்தி ஆகியோரின் உருவப்படங்களை எவ்வளவு தத்ருபமாக இந்த சின்னஞ் சிறிசுகள் வரைந்துள்ளனர். என்ற வியப்புடன் நகரும் பார்வையாளர்களுடன் நானும் நகர்கிறேன். முதலாம் இரண்டாம் மூன்ரும் வகுப்பு மாணவர்களின் பிரிவு காட்சிப் பகுதியில் வீட்டுத்தளபாடங்கள்- கலியாணவைபவம் - பொங்கல் விழா என்பனவற்றினை தமது உள்ளத்தில் உள்ளதை ஒழிவு மறைவுஇன்றி படமாகவும்- மாதிரிகளாகவும் அமைத்து வைத்திருந்தனர். பல பாடசாலை மாணவர்களின் கைத்திறனை பார்வையாளர்கள் மனம் திறந்து பாராட்டிய போது தமிழ் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய ஒரு ‘பச்சை விளக்கு’தெரிகிறது.

சுன்னுகம் ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலையினரின் கைவண்ணம் அங்கே உயர்ந்து நிற்கிறது. சூரிய குடும்பத்தை மிக தெளிவாக பல ‘‘பெரியவர்களுக்கும்’’ புரியவைத்த அந்த ‘‘சிறிசுகள்’’ பெற்ற பாராட்டுக்கள் ஏராளம்! சூரியனையும் அதனை சுற்றும் கோள்களையும் அவற்றின் சுற்றுவட்டப்பாதையையும் மொடலாக அமைத்து விளங்கப்படுத்துகிறுர்கள். காற்றின்உதவியால் சுழலும் விசிறி கொண்டு மா அரைக்கும் இயந்திரத்தின் இயக்கத்தினை மாதிரியாக்கிய சிறுவர்களின் ‘மூளையை’ பாராட்டாத பார்வையாளர்களே இல்லை எனலாம் நீர் வீழ்ச்சி மூலம் எவ்வாறு மின்சாரம் உற்பத்தியாகிறது என்பதை ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் எப்படி புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதை என்னுல்புரிந்து கொள் சிலநிமிடங்கள் சென்றன. அந்த சிறுவர்களுக்கு பாராட்டுக்களை வாங்கிக் கொடுத்த ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை திருமதி. ஞானமணி சதாசிவரத்தினம் உயர்கல்வி அதிகாரிகளினுலும் ஆசிரியர்குழாத்தினுலும் பாராட்டப்பட்டார்.

மாணவர்களின் திறமையைப்பாராட்டி பரிசில்களையும், சான்றிதழ்களையும் திருமதி. சிமியாம்பிள்ளை வழங்கிஞர்.

ஜனனி. புஷ்பநாதன்

## ரஞ்சன் லாலா மரணம்: உரிமைகோரி பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனுற்றுப் பகுதியில் பொலிஸ் அதிரடிப்பிரிவினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பருத்தித்துறையைச் சேர்ந்த ரஞ்சன் லாலா என்றழைக்கப்படும் கனகரத்தினம் ராஜ்மோகனுக்கு அஞ்சலி செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுல் வெளியிடப்பட்ட சுவரொட்டிகள் யாழ் குடாநாடெங்கும் காணப்படுகின்றன.

‘‘இயக்கத்தின் தாக்குதல் பிரிவு காப்டன் ராஜ்மோகன்’ என்றும் அச் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்தவரின் சடலத்தை அவரின் தந்தையாரான கனகரத்தினம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து தனது மகன் என்று அடையாளம் காட்டிஞர்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்பேரில், இறந்தவரின் சடலம் தந்தையாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 14 ம் திகதி பிற்பகல் தொண்டமனுற்றுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை பொலிஸ் அதிரடிப்பிரிவினர் சோதனையிட முயன்றபோது நிறுத்தாததைத் தொடர்ந்து சென்ற மோட்டார் சைக்கிள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, பின் ஆசனத்திலிருந்த ராஜ்மோகன் மரணமானுர் என்று ராஜாங்க அமைச்சினுல் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே. (மா)

## யாழ். ஆஸ்பத்திரிகளில் முறைகேடு: திடீர் பரிசோதனைக் குழு கண்காணிக்கும்!

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், மற்றும் சுகாதார நிறுவனங்களிலும், கடமையாற்றும் ஊழியர்களை கண்காணித்து முறைகேடாக கடமை நேரங்களில் நடப்பவர்கள் மீது உடன் நடவடிக்கை மேற் கொள்வதற்கென திடீர் பரிசோதனைக்குழுவொன்று யாழ். பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளரினுல் அமைக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் தங்கள் கடமை நேரத்தில் மது போதையில் காணப்படுதல், மருந்து வகைகளை திருடுதல் மற்றும் முறைகேடான வகையில் நடப்பது ஆகியன பற்றி இந்த திடீர் பரிசோதனைக்குழு உடனுக்குடன் நடவடிக்கை மேற் கொள்ளும் என்று இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய முறைப்பாடுகள்உடனுக்குடன், கிடைக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட இடங்களுக்கு இக்குழு புறப்பட்டு சென்று விசாரணை நடாத்தி ‘‘கையும் மெய்யுமாக’’ பிடிக்கும் என்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் சுகாதாரப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். ஆஸ்ப்பத்திரிகளில் எந்த நேரமும் இத் திடீர் பரிசோதனைக் குழுவினர் பலத்த கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் அறியப்படுகின்றது.

## இஸ்ரேல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இடம்பெறும் பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியே முன்னணியில் நிற்கின்றது. இதன் தலைவரான திரு. சிமொன்பெரஸ் புதிய பிரதம மந்திரியாவார் என்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலில் தற்போதைய பண வீக்கம், மற்றும் பொருளாதார நெருக்கடிகளைப் புதிய அரசாங்கம் சமாளிக்கவேண்டியிருக்கும். பணவீக்க நிலைமை பாதகமாகவே காணப்படுகின்றது. (கி)

## காரைநகரில் இதுவரை பென்ஷன்வழங்கப்படவில்லை

(சித்தன்கேணி)

காரைநகர் தபாற்கந்தோரில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இந்தமாதத்துக்கான ஓய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லை.

காரைநகர் தபாற்கந்தோரில் ஓய்வூதியம் பெறும் சுமார் 150 இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்தமாதம் 11ம் திகதி வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப்பணம் இதுவரை வழங்கப்படவில்லை. இதனுல் ஓய்வூதியப்பணம் பெறுபவர்கள் தபாற்கந்தோருக்கு நாள் தோறும் சென்று ஏமாற்றத்துடன்வீடு திரும்புகின்றனர்.

## யாருடையது

நெல்லியடி திரு மகேந்திரன் என்பவருக்குரிய 85ஸ்ரீ5559க்குரிய மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரமும் இன்சூரன்ஸும் திரு.செ. வைகுந்தவாசன் என்பவர் கண்டு எடுத்து ,ஈழநாடு’ அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பயங்கரவாதிகளில்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பெண்களுக்கும் செய்து தரப்பட வேண்டும்.

— அத்தனகல எம். பி.

இவ்வாறு கடந்த வியாழன்று பெண்களுக்காக — பெண்களின் நலனுக்காக பாராளுமன்றத்தில் ஆண்களிடமிருந்து குரல் எழுந்தது. இரவு 10 மணிக்குப் பின்னரும் பெண்களை வேலை செய்ய அனுமதிக்கும் திருத்தச் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது எதிர்க்கட்சியினர் அச்சட்டமூலத்தைக் காரசாரமாகக் கண்டித்ததுடன் வாக்கெடுப்பின் போதும் சற்றுக் கண்டிப்புடன் விடாப்பிடியாக நின்று பெயர் அழைக்கும் வாக்கெடுப்பை நடத்திவிட்டனர்.

சபையில் ஒரு அமைச்சர், இரு மாவட்ட அமைச்சர்கள் உட்பட 7 பெண்கள் இருந்தும் கூட எவருமே பெண்களின் விவகாரம் தொடர்பான அந்தசர்ச்சைக்குரிய மசோதா மீதான விவாதத்திலோ வாக்கெடுப்பிலோ கலந்து கொள்ளவில்லை. இவர்களில் ஒருவர் பெண்கள் விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இவரையும் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரையும் சபையில் சில நிமிடங்கள் காண முடிந்தது மட்டுமே.

பிரபல தொழிற்சங்கவாதிகளான அமைச்சர்கள் தொண்டமான், சிறில் மத்யூ ஆகியோர் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இம்மசோதா விவாதத்தின்போது சபையிலிருந்து மௌனம் சாதித்துவிட்டு மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர்.

## ஊர் வாய்

-நக்கீரன்-

சென்ற புதன் ‘ஊர்வாயை’ வாசித்த டொக்டர் ஒருவர் ‘பசிநோக்கார் ........ கருமமே கண்ணுயினுர்’ என்ற பாடலைப் பாடியவர் ஔவையார் அல்ல குமரகுருபரசுவாமிகள் என்று தெரிவிக்கிறுர். எமது குற்றம் குற்றமே இன்னெரு வாசகர் எழுதிய கடிதத்தில் ஒருபாடல் இப்படி இருக்க அதற்கு நேர் எதிராக ‘பசிவந்திடப் பத்தும் பறந்து போம்’ என்று அதே மொழியில் வேறு பாடல் இருப்பதன் நூதனத்தைக் குறிப்பிட்டிருந்தார். இது புதிதல்ல ‘‘இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்’ என்று இரு சாதிகளைப்பற்றி ஒரு பாடலும் ‘குலத்தளமேயாகுமாம் குணம் என்று இன்னெரு படலும் இருப்பதை பற்றி தொழில் அதிபர் ஒருவ எழுதியிருக்கிறுர்’ ஏன் பலமொழிகளும் பெரியோர் வாக்குகளும் கூட இப்படி மக்கள் வசதிக்கேற்ற மாதிரி உருவெடுத்து முரண்படுகின்றன ‘கிட்டாதாயின் வெட்டென மற என்று சோம்பேறிகளுக்காக ஒருவாக்கும் ‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்று முயற்சியுடையோருக்கென ஒரு வாக்கும் இருப்பதை நாம் அறிவோம், வள்ளுவர் கூட ‘முயற்சி தன் மெய் வருந்தக்கூலிதரும்’ என்று கூறவில்லையா? மேலும், போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து’ என்று ஒரு பழமொழி இருக்க புரட்சிக் கவி பாரதி, பெரிதினும் பெரிது கேள்’ என்று தனது புதிய ஆத்திசூடியிலே பாடியதையும் காண்கிறேம்.

சொற் சாதுரியத்தைப் பற்றிக் குறிப்பிட்ட போது வேறு பல சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன. சேர் ஜோன் கொத்தலாவல பிரதம மந்திரியாக இருந்த போது அவருடைய படம் ஒன்று பாராளுமன்றத்திலே திரை நீக்கம் செய்யப்பட இருந்தது. ஒரு விவாதத்தின் போது இதைப் பற்றப் பேசிய கலாநிதி என். எம். பெரேரா இது மிகவும் விந்தையாக இருக்கிறது என்று கூறிஞர். உலகில் எந்த நாட்டிலாவது ஒரு பிரதம மந்திரி கடமைபுரியும் காலத்தில் இதற்கு என். எம். தனது அறியாமையையும் மறைத்து சேர் ஜோனுக்கும் ஒரு தட்டுப் போட்டு சொற்சாதுரியத்துடன் கொடுத்த பதில் ‘அது எனக்குத் தெரியும் ஆனுல் சேச்சில் பெரிய மனிதர் அல்லவா’ என்பதே.

தமிழ் நாட்டிலே கருணுநிதி முதன் மந்திரியாகக் கடமையேற்ற போது பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம், ‘உங்கள் ஆட்சியில் மதுவிலக்கு தொடர்ந்து அமுலில் இருக்குமா எனக் கேட்டதற்கு இப் போதைக்கு மாற்றமிருக்காது என்று இருகருத்துப்பட உடன் பதில் கொடுத்தார்

சொல் வீரர் பொன்னம்பலம் பல தடவைகள் பராளுமன்றத்தில் சுடச்சுடச் பதிலடிகள் கொடுத்திருக்கிறுர். இவை எல்லோருக்கும் தெரியும். ஆனுல் வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு என்பதை முன்னுள் சபைப்பிரதிநிதி பாலசுந்தரம் ஒருமுறை தெளிவாக விளங்க வைத்தார்.

ஒரு விவாதத்தின் போது பாலசுந்தரத்தை ஜீ. ஜீ. யை ஒரே மேடையில் விவாதப் போட்டிக்கு அழைத்தாராம். அதை ஏற்கமறுத்த ஜீ, ஜீ. ‘நான் எனச்குச் சமமானவருடன் மட்டுமே போட்டிக்கு வருவேன்’ என்று கூறிஞர். பாலசுந்தரம் விட்டுக்கொடுக்காமல் ‘பரவாயில்லை, நான் உம்முடைய தரத்திற்கு இறங்கத்தயார்’ என்ருராம்.

அவரின்படம் அதே பாராளு

(8-ம் பக்கம் பார்க்க)

# கண்ணி வெடிக்கு இராணுவ வீரர் பலி

(கொழும்பு)

பூநகரிக்காட்டில் மிருகங்களுக்கு வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை தற்செயலாக மிதித்த இராணுவ வீரர் ஒருவர் பலியானர்.

விறகு சேகரிப்பதற்காகக் காட்டுக்குச்சென்றபோது மிருகங்களைப்பிடிப்பதற்காக வைக்கப்படும் கண்ணிவெடியை தற்செயலாக மிதித்ததால் குண்டு வெடித்து பலத்த காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மரணமானர்.

ஞாயிறன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் எச். ஏ. சி. ஹக்மன என்ற இராணுவ வீரரே பலியானவராவார்.

## திருமலைநகர மின் பாவனையாளர் நிலுவைப்பணமாக ரூ. 27 லட்சம்!

(திருகோணமலை)

திருகோணமலை நகர சபைக்குச் சேரவேண்டிய 27 லட்சம் ரூபா பணம் நகர மின்சார பாவனையாளர்களிடம் நிலுவையாக உள்ளது.

இந்த நிலுவைப் பணத்தை உடனடியாக அறவிடுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் திருகோணமலை நகரசபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பணஞ் செலுத்தாத பாவனையாளர்களுக்கான மின்சாரத் தொடர்புகள் துண்டிக்கப்படுகின்றன.

நிலுவைப் பணத்தில் ஒரு பகுதியைச் செலுத்தினலும் கூட மின்னிணைப்பு மீண்டும் வழங்கப்படாது என்றும், முழு நிலுவைப் பணத்தையும் செலுத்தியபின்னரே மீண்டும் மின்னிணைப்பு வழங்கப்படும் என்றும் நகரசபை அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்

## உற்சவம்

[யாழ்ப்பாணம்]

ஊரெழு கிழக்கு அருள்மிகு பருவதபாத்தினி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 20ம்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. வரும் 30ம் திகதிரதோற்சவமும், மறுநாள் ஆடிப்பூரத்திலன்றுதீர்த்தோற்சவமும் ஆகஸ்ட்முதலாம் திகதியன்று பூங்காவன உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகோற்சவகிரியைகளைச் செய்துவருகிறார்கள்.

## ரூபவாஹினி

மாலை
5-30 நாட்டுவளம் பெரிய பள்ளிவாசல் (தமிழ்)
5-35 'கிரேட்ஸ்பேஸ் கோஸ்ரர்' (ஆங்கிலம்)
6-00 'மலரும் அரும்புகள்' சிறுவர்நிகழச்சி(தமிழ்)
6-30 உடலியல் (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 நாடகம் (சிங்களம்)
7-45 சிங்கள திரைப்பட விளம்பர நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 'லட்கி' வைஜந்தி மாலா, பாரத்பூஷண் அஞ்சலிதேவி, கிஷோ குமார் நடித்த திரைப் படம் [ஹந்தி)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## சின்ன மடுமாதா திருநாள்

(சரவணை)

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்ருன சரவணை 'சின்னமடுமாதா, வருடாந்த திருநாள் இம் மாதம் 27ந் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆகஸ்டு மாதம் 5ம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் திருநாள் முடிவடையும்.

## வானெலியில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை வெங்கடேச சுப்பிர பாதம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-55 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
7-00 பாட்டு எம். ஸ்ரீரங்க நாதன்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியவிருந்து
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம்
6-30 உதயமஞ்சரி
7-00 களத்துமேடு

இரவு
7-15 நாடகம் ''பேராடும் நெஞ்சங்கள்'' நவாலியூர் த. பரமலிங்கம்
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்
7-45 நாட்டியஇசை
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் வாத்தியஇசை
9-30 உரையாடல் - சமூகச் சீர்திருத்தத்திற்கு இன்றைய நாவல்களின் பங்களிப்பு அன்புமணி
10-00 தாளவாத்தியக் கச்சேரி-ஏ. ரகுநாதன்
10-30 குரல்வகை
11-00 ஒலிபரப்பு முடிவு

## கி. அபி.சங்க நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவருத்திச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் திரு. எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு பங்குத் தந்தை வண பிதா.எஸ்.ஜெயக்குமார் அடிகள், பண்டத்தரிப்பு ப. நோ. கூ சங்கத்தலைவர் திரு.ஆ.யேசுதாசன், பண்டத்தரிப்பு கூட்டுறவு மகளிர் குழு கல்வி உத்தியோகஸ்சர் திரு.எஸ். நடராசா ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

சங்க நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

போஷகர்கள்;- பங்குத் தந்தை வண.பிதா.ஜெயக்குமார் அடிகள் சங்.சகோதரி. யூலாலி தலைவர்:-திருமதி.ரூபி ஜேசுதாசன். செயலாளர்:- செல்வி. செல்வநாயகி லூர்காஸ். பொருளாளர்: திருபதி.ஜெபமணி ஜோசவ் செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவாகினர்.


இல்லத்தரசிகளே!
இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா?







றஜசோயா

இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா ?
முழுக்குடும்பத்துக் குமான புரதச்சத்து நிறைந்த உணவு.
றஜசோயா வாழ்க்கைச் செலவு மின்னல் வேகத்தில்
உயர்ந்து கொண்டுப் போகும் இவ்வேளையில்
வீட்டுச் செலவை குறைக்க உதவுகின்றது.
றஜசோயா பலகாரங்கள் தயாரிப்பதற்கும்,
ரொட்டி அப்பம், இடியப்பும்,
பிட்டு முதலியன தயாரிப்பதற்கும் இன்றியமையாதது.
றஜசோயா புரதச் சத்து நிறைந்தது.
போஷாக்கு அடங்கியது.
காலஸ்ட்ரோல் எனும் கொழுப்புச்சத்து
அறவே இல்லாதது.
றஜசோயா மக்களின் அபிமானம் பெற்ற உணவு.
இன்றே உங்கள் சில்லறை வியாபாரியிடம் ஒரு பக்கட்
வாங்கிக் கொள்ளுங்கள்.
முதன் முறையாக.
நவீனமயமான தொழிற்சாலையில் சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டது.

றஜறட்ட ஃபுட் கிறெயின்
புறேசெசிங் கம்பனி லிமிட்டெட்
29, பிறே புறூக் வீதி, கொழும்பு - 2.
தொலைபேசி: 27961-7
றஜசோயா எனக் கேட்டு வாங்குங்கள்.
தரங்குறைந்த போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

ZENITH

## செல்லக் கதிர்காம திருவிழா

(சரவணை)

சரவணை தெற்கு 'குடிசைக் குமரன்' ஆலயம் என அழைக்கப்படும் ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் 'கதிர்காமத்தினவிழா' இம் மாதம் 28ம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.


**ராணி** (யாழ் நகர்)
இன்னும் சில தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
**ராமன் தேடிய சீதை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
SPIDER MAN
STRIKES BACK
Part II

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30
மட்டும்
மேஜர் - தேவிகா
**ஆலயம்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - கே. ஆர். விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
Armand Assante
Barbara Carrera
எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
'I The Jury'
பார்க்கத் தவறாதீர்கள்
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)


**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள் ஓடி சரித்திரம் படைத்த ஆங்கில திரைக்காவியம்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
**கைநிறைய காசு**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ஜெமினிகணேசன்
சாவித்திரி, பாலாஜி,
கே ஆர் விஜயா
நடித்த
**அன்னையின் ஆசை**


உயரப்பாய்தலில்——

# ஜயந்தி சோமசேகரம் இலங்கையில் புதியசாதனை



(யாழ்ப்பாணம்)

செல்வி ஜயந்தி சோமசேகரம் உயரம் பாய்தலில், இலங்கையில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இலங்கை தேசிய மெய்வல்லுனர் சம்மேளனத்தின் ஆதரவில் கொழும்பு பொலிஸ் மைதானத்தில் அண்மையில் மாவட்டங்களிடையே நடைபெற்ற இப்போட்டியில் இவர் 4 அடி 10 அங்குலம் உயரம் பாய்தலில் பாய்ந்து இலங்கையில் 19 வயதுக்குட்பட்டவர்கள் பெண்கள் பிரிவில் ஒரு புதிய சாதனையை எற்படுத்தினர்.

செல்வி ஜயந்தி சோமசேகரம், மேற்படிப் போட்டியில் 100 மீற்றர் தடைதாண்டி ஓட்டத்திலும், கடும் மழையையும் பொருட்படுத்தாது ஓடி முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவர் கடந்த மாதம் யாழ். மாவட்ட உதவி அரசாங்க பிரிவுகளிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் உயரம் பாய்தலில் 4 அடி 11½ அங்குலம் பாய்ந்து ஒரு புதிய சாதனையையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 29.5 விநாடிகளில் ஓடி ஒரு புதிய சாதனையையும் ஏற்படுத்தி, இப்போட்டியில் 'சிறந்த சாதனை வீராங்கனை'க்கான விருதைப் பெற்றவர்.

செல்வி ஜயந்தி சோமசேகரம், 1982-ம் ஆண்டிலேயே, இலங்கை தேசிய மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் கொழும்பில் அகில இலங்கை ரீதியில் நடாத்திய போட்டியில், 17 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் உயரம் பாய்தலில் 4 அடி 8 அங்குலம் பாய்ந்து முதலிடத்தையும், 100 மீற்றர் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் 17.5 விநாடிகளில் ஓடி முதலாவது இடத்தையும் பெற்றவர்.

''அகில இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் அடுத்த மாதம் முற்பகுதியில் கொழும்பில், பெண்களுக்கிடையில் நடாத்தவிருக்கும் மெய்வல்லுனர் போட்டியில் இவர் மேலும் சிறப்பாகச் சாதனைகள் புரிந்தாராகில், மிகவிரைவில் வட கொரியா செல்லவிருக்கும் இலங்கைக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கக் கூடும்'' என செல்வி ஜயந்தி சோமசேகரத்தின் பயிற்சியாளரான, யாழ்ப்பாணம் விளையாட்டு உத்தியோகஸ்தரும், யாழ். - மன்னார் மாவட்ட மெய்வல்லுனர் பயிற்சியாளருமான திரு. கே, டபிள்யூ. விமலராஜா கூறினர்!

செல்வி ஜயந்தி சோமசேகரம், வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், யாழ். றிம்மர் விளையாட்டுக் கழகத்தினதும், இலங்கை றக்-அன்-பீல் கழகத்தின் அங்கத்தவருமாவார். (வி)

# 'மூளை, இருதய இயக்கத்துக்கு விளையாட்டு மிக அவசியம்''

(பண்டத்தரிப்பு)

''மாணவர்கள் வெற்றி தோல்விகளை எதிர்பார்க்காது விளையாட்டுக்களில் பங்குபற்ற வேண்டும். எமது உடலின் உறுப்புக்களும், அவயவங்களும் திறம்பட தொழிற்படுவதற்கு விளையாட்டுக்களிலும் உடற்பயிற்சிகளிலும் ஈடுபடுவது அவசியமானதாகும் குறிப்பாக மூளை, இருதயம் ஆகியன நல்லமுறையில் தொழிற்படும்''

இவ்வாறு யாழ். அரசினர் வைத்தியசாலை காது, மூக்கு தொண்டை சிகிச்சைப்பிரிவின வைத்திய நிபுணர் டாக்டர் செ.ஞானனந்தா வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கனிஷ்ட பிரிவு பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு உ. ந.தேவகடாட்சம் தலைமையில் யாழ்ப்பாணக்கல்லூரி பிக்னல் விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது.

டாக்டர் ஞானனந்தா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''மாணவர்களுக்கு பாடங்கள் எவ்வளவு முக்கியமானவையோ அதுபோல விளையாட்டுக்களும் முக்கியமானவையாகும். மாணவரிடையே தேங்கிக் கிடக்கும் ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதற்கும் அவர்களை சாதனை வீரர்களாக உருவாக்குவதற்கும் இது போன்ற விளையாட்டுப்போட்டிகள் பேருதவி செய்கின்றன. ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் அடிக்கடி கலந்துரையாடி தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலைபற்றி அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும். இதேபோல பாடசாலை முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அதிபர், நிர்வாகிகளுக்கு பெற்றோர்கள் போதியளவு ஒத்துழைப்பை நல்கவேண்டும்'' என்றார்.

பாடசாலை அதிபர் திரு உ. ந.தேவகடாட்சம் தமது தலைமையுரையில் மாணவர்கள் சகலவிதமான விளையாட்டுப் பயிற்சிகளையும் பெறுவதற்கு பாடசாலையில் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும், பாடசாலைப் பாடநேரம் முடிந்தவுடன் ரீயூஷன் வகுப்புக்களை நாடி வருவதைத் தவிர்த்து இப்பயிற்சிகளை பெற்று அவர்கள் பயனடைய வேண்டும் என்றும், இப்பாடசாலையின் பழைய மாணவரான டாக்டர் ஞானனந்தா இப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதையிட்டு தாம் பெருமகிழ்ச்சியடைவதாகவும், இப்போட்டியை சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி கூறுவதாகவும் குறிப்பிட்டார் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி சத்தியவதி ஞானனந்தா வழங்கினர். இல்ல விளையாட்டுப் போட்டியில் ஹாஸ்ரிங்ஸ் இல்லம் (சிகப்பு இல்லம்) 428 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியது. ஏபிரஹாம் இல்லம் (பச்சை) இரண்டாம் இடத்தையும், பிரவுன் (வெள்ளை) இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 10 (25 - 7 - 1984)
வாரம்: புதன்கிழமை
**திதி: துவாதசி முன்இரவு 9—44 வரை**
நக்ஷத்திரம்: மிருகசீரிடம் பின் இரவு 4 — 26 வரை

மேடம்: பணவிடயத்தில் அதிககவனம் செலுத்தவும் தொழில்துறையில் சிலசிக்கல்கள் தோன்றக்கூடும் எந்த விடயத்திலும் பொதுவாக ஒருதடுமாற்றம் தென்படும் நாவடக்கம் நன்று.

இடபம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சி இடம் பெறும் இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

மிதுனம்: எதிலும்அவசரகோலம் தென்படும் முன்னேற்றம் பாதைகளில் தடைகள் ஏற்படும் தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகும் வாய்ப்புப தார்த்தங்களை தவிர்க்கவும்.

கடகம்: அறவழியில் நாட்டம் பிறக்கும் தாராள சிந்தை மேலிடும் குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும் எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கு வழிகோலப்படலாம்.

சிங்கம்: எண்ணியது எண்ணியபடி நடக்கும் உத்தியோகஸ்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள் மக்கள் செல்வாக்கு மனதை குளிரவைக்கும் அதிர்ஷ்டதினம்.

கன்னி: முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் சிலருக்கு அன்னியவாசமும் அகால போசனமும் உண்டு.

துலாம்: உள்ளத்தில் மகிழ்ச்சி நிலவும் குருவின் ஆசியுடன் குறிக்கோளில் வெற்றியுண்டு நேர்முகப் பரீட்சை வெற்றியைத் தேடித்தரலாம். இரக்கசிந்தை மேலிடும் யாத்திரைப் பிரியமும் ஏற்படும்.

விருச்சிகம்: தொழில்துறையில் நல்லவருமானம் கிடைக்கும் வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு புதிய உடன் படிக்கையின் மூலம் மகிழ்ச்சிகரமான பயணமும் மேற்கொள்ளப்படலாம்.

தனுசு: உறவுமுறைகளில் இணைப்பு ஏற்படும். உற்சாகம் பிறக்கும் புதிய நண்பர்கள் புடைசூழ்வார்கள் வாழ்த்தும் உண்டாகும்.

மகரம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும் கற்றதனுல் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும் செய்தொழிலில் புதிய உத்திகளை கையாளுவீர்கள் சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்: அதிர்ஷ்டதேவதையின் அணைப்பு உங்களுக்கு கிடைக்கலாம் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்போர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும்

மீனம்: இன்னலின் பின்னலால் வேதனைப்படுவீர்கள் நீண்டகாலத்தொடர்பு இன்று துண்டிக்கப்படலாம் அவசர முடிவுக்கு வராது நன்ருக சிந்தித்த பின்பே செயலாற்றவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மகாஜன, நடேஸ்வரா சாம்பியன்கள்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திஞல் நடத்தப்பட்ட 19 வயது 17 வயதுக்கு இடைப்பட்டோர்களிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரியும், நடேஸ்வராக் கல்லூரியும் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

## பிரிட்டனில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினர். வேலைநிறுத்தத்தினுல் பாதிக்கப்பட்ட லொறிச் சாரதிகள் வேலைநிறுத்தக்காரர்களைப் பயமுறுத்தும் வேலைகளில் ஈடுபட்ட தனுலேயே இங்கு தொழிலாளர்கள் விரைவில் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

இதே வேளை பிரிட்டனின் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து இடம்பெறுகிறது. 19 வாரங்களாக நீடிக்கும் இவ்வேலை நிறுத்தத்தால் இங்கு மூன்றில் இரண்டு பகுதி நிலக்கரிச் சுரங்கங்கள் மூடப்பட்டுள்ளன. (கி)


யந்திர வகைகள்

## குத்தகைக்கு வேண்டுமா?

இரும்புகடைச்சல் யந்திரம்
மரக்கடைச்சல் யந்திரம் (LATHE)
புதிய போக்குவரத்து வாகனங்கள்
சலவைச்சாதனங்கள் — வைத்தியசாதனங்கள்
மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்

1. சொத்துக்களை நிரந்தரமாக்கிக் கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தி செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.
2. 100% வருமான வரிச்சலுகையை உறுதிப்படுத்துவது குத்தகையே.
3. குத்தகை உங்கள் வருமானத்தை விருத்தியடையச் செய்யும். இதனுல் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

**த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்,**

249மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

# "நான் கொழும்புசென்றாலும் இதயத்தில் நீங்கள் இருப்பீர்கள்!"

## யாழ் பொலிஸ்அதிபர் உருக்கமான கருத்து

(யாழ்ப்பாணம்)

''மக்களின் சிறு சிறு குற்றங்கள் பெரிய குற்றங்களாகி சில சமயம் கொலைகளுக்கும் வழி கோலுகின்றன, ஆதலால் சிறுசிறுகுற்றங்களை பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்குழுக்கள் ஆரம்பத்திலேயே தீர்த்து வைக்கின்றன, பொலிஸ் நிலையங்களில் நேரத்தை வீணாக்காது; நீதிமன்றங்களில் பணத்தைச் செலவிடாது மக்களே மக்களின்பிரச்சினைகளைத்தீர்த்து வைப்பதற்கு இக்குழுக்கள் பரவலாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அப்பொழுதான் உண்மையான சகஜநிலை ஏற்படும்,''

யாழ். பொலிஸ் நிலைய ஆலோசனை மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் பதிலளித்துப்பேசிய யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் அதிபர் திரு ரி. ஈ. ஆனந்தராஜா பொலிஷ் நிலைய வாசலில், மாலை சூட்டி, மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் குழு மத்தியகமிட்டி செயலாளர் திரு. ஏ. வி. ஸ்ரனிஸ் லொஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் பொலிஸ் அதிபர் திரு ஆனந்தராஜா மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நான் கொழும்பு சென்ற பின்னரும், பொலிஸ் - பொது மக்கள் நல்லுறவுக் குழுக்கள் தொடர்ந்து செயல்பட்டு யாழ்ப்பாண பகுதியில் அமைதியும் சமாதானமும் மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணமும் நிலவப்பாடுபட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

''இப்பகுதியில் பதட்டநிலை நீங்கி சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு, அமைதி நிலவவேண்டும் என்பதற்கு நான் முயற்சித்தேன். அந்த முயற்சி வெற்றி அளித்ததா என்பது உங்களுக்குத்தான் தெரியும்.

''இந்தப் பிரிவுபசார விழா ஒழுங்கு செய்தவர்களிடம், இதனை நான் விரும்பவில்லை என்றும் இப்போதுள்ள சூழ்நிலையில் விழாவைப்பது பொருத்தமில்லை என்றும் கூறினேன் நான் விரும்பாதபோதிலும் அவர்களின் அன்பு வேண்டுகோளை மறுக்கமுடியாமல் போய்விட்டது.

''இந்த விழா எடுக்காவிட்டாலும் என்னுடன் நீங்கள் அன்பாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் அன்பை நான் என்றும் மறக்கப்போவதில்லை. நான் கொழும்புக்குச் சென்றாலும் என்னுடைய இதயத்தில் நீங்கள் என்றும் இருப்பீர்கள்.

(க)

## கூட்டணி உண்ணாவிரதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியஸ், திரு அப்பையா, திரு எஸ். நாகராசா, திரு ராஜா விஸ்வநாதன், திரு 'இராமலிங்கம்' திரு கைலாயபிள்ளை உட்பட 18 பேர் மட்டும் அதே இடத்தில் அசையாமல் தொடர்ந்து இருந்தார்கள்

முன்பக்கத்தால், இளைஞர்கள் கேள்விக்கணைகளை தலைவர்களிடம் கேட்டு கொண்டு முன்னேற திரு. இராமலிங்கம். திரு அப்பையா, திரு. அலோசியஸ் ஆகியோர் எழுந்துநின்று இளைஞர்களை தலைவர்களுக்குக் கிட்டச் செல்லவிடாமல் தடுத்துக் கொண்டு கேள்விகளுக்குப் பதிலளித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் திரு. இராமலிங்கத்தை இளைஞர்கள் முன்னுக்கு இழுத்தபோது அவர் பின்னால் சென்று அமர்ந்துவிட்டார். இளைஞர்கள் உண்ணாவிரதிகள் அணிந்திருந்த கறுப்புப் பட்டிகளைக் கழட்டி எடுத்துக்கொண்டார்கள்.

முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. நீலன் திருச்செல்வம், நண்பகலுடன் அவ்விடத்தைவிட்டுச்சென்றுவிட்டார். உண்ணாவிரதம் இருந்த வேறு சிலரும் சென்றுவிட்டனர்.

திரு.எம். ஆலாலசுந்தரம், திரு இரா சம்பந்தன் பண்டிதர் க.பொ.இரத்தினம், திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் மண்டபத்தில் மற்றொரு மூலையில் சென்று அமர்ந்தனர். இளைஞர்கள் அவர்களையும் சுற்றிவளைத்து 'இளைஞர்களின் போராட்டத்தை முறியடிக்க உண்ணாவிரதமா?' என்று கேட்டார்கள்

### சம்பந்தன் பதிலளித்தார்

இளைஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு திரு. சம்பந்தன் பதிலளித்துக்கொண்டிருந்தார்.

பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம்எடுக்காததனால் தான் இதுவரை நீதிமன்றம் செல்வதில்லை என்றும் இரவு பகலாக திருமலை மக்களுக்குச் சேவை புரிந்துவருவதாகவும் கூறினார். திரு.எம். ஆலாலசுந்தரம். பண்டிதர் க.பொ.இரத்தினம் ஆகியோர் மௌனமாக இருந்தார்கள்.

திரு சிவசிதம்பரம், திரு. அமிர்தலிங்கத்துடன் இருந்த 18 பேரையும் நாலாபக்கங்களிலும் இளைஞர்கள்கைகோர்த்து சுற்றிவளைத்துக்கொண்டு கேள்விகள்கேட்டார்கள். நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் நிலத்தில் அமர்ந்துகொண்டனர்.

திருமதி மகேஸ்வரி தம்பு என்ற பெண், அங்கு வந்து நீங்களும் உங்கள் குடும்பமும் பாதுகாப்பாக இந்தியாவில் இருக்கிறீர்கள் நாங்கள்தான் தினமும் பிள்ளைகளை பலிகொடுக்கிறோம்'' என்றார்.

திரு வடிவுநாதன் என்பவர் கடந்த 35 வருடமாக தலைவர்கள் எதுவும் செய்யவில்லை என்றும், இளைஞர் வழிபடிதான் தமிழ் மக்கள் இன்று செல்ல தயாராகிவிட்டார்கள் என்றார்

மற்றொரு 10 வயது சிறுவன் உண்ணாவிரதத்தை விட்டுவிடுங்கள் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து இளைஞர்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர்.

அரசின் உதவியுடன் 'ஆமியை' முகாமில் இருக்கசெய்துவிட்டு உண்ணாவிரதம் இருக்கிறீர்கள் என்று ஒரு இளைஞர் கூறினார்.

இளைஞர் போராட்டத்தை முறியடிக்க இந்த உண்ணாவிரதமா? என்று மற்றொரு இளைஞர் கேட்டார்.

### தண்ணீரை தெளித்தனர்

பின் பக்கத்திலிருந்து தண்ணீரை அள்ளி தெளித்தார்கள். சோற்றுப் பார்சல்கள் மண்டபத்திற்குள் அங்குமிங்குமாக சிதறிக் கிடந்தன. மண்டபத்தின் நடுவில் உள்ள நீர்த்தொட்டி படிகட்டிலிருந்து ஒரு இளைஞர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

நண்பகல் வரை ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது உண்ணாவிரதத்தை ஆதரித்தும் ஒரு இளம்பெண் பேசியபோது அதனை எதிர்த்து இளைஞர்கள் பதிலலித்ததை தொடர்ந்து அப்பெண் அங்கிருந்து சென்றுவிட்டார். யாழ் முன்னாள் முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதனை சுற்றிநின்றும்இளைஞர்கள் கேள்விகள் கேட்டார்கள். உண்ணாவிரதம் இருந்த பெண்களில் சிலர் சென்றுவிட்டனர் 7 பேர் மட்டும் மண்டபத்தின் பிற்பகுதியில் அமர்ந்திருந்தனர்

இளைஞரின் கேள்விகளுக்கு திரு. சிவசிதம்பரம் பதிலளித்துக் கொண்டிருந்தபோது மற்றொரு இளைஞர் களைத்து விட்டீர்கள் என்றுகூறி சோடா போத்தலை கொடுத்தார். அவர் பின்னர் திரு. அமிர்தலிங்கதிடம் சோடா போத்தலை நீட்ட அவரும், ஏற்கவில்லை பின்னர், தண்ணீர் கொண்டு வந்து கொடுத்த போதும், அவர்கள் எடுக்கவில்லை.

நண்பகல்வரை உண்ணாவிரதம் நடந்த பகுதியில் ஒரு அமளிதுமளியாக இருந்தது.

## உலகுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்புக்கொடுத்து 4 மணிக்கு முடிக்கவிருந்த உண்ணாவிரதத்தை மூன்று மணிக்கு முடித்துவைக்கவுள்ளதாகத் தெரிவித்தார். அப்பொழுது இளைஞர்கள் ஆரவாரம் செய்து கோஷம் எழுப்பினர்.

மானத்தை இழந்து நிற்கும் தமிழினத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள்கையில் தான் தங்கியுள்ளது என்று திரு. இரா சம்பந்தன், அங்கு நின்ற இளைஞர்களுக்கு வலியுறுத்திச் சொன்னார்

அடுத்து திரு. சிவசிதம்பரம் பேசுகையில், ''எமது இனத்தைக் கூறுபோட்டுப் பலயீனப்படுத்தி அழிக்க அரசுமுயல்கிறது. அரசின் இந்தச்சூழ்ச்சிக்குப் பலியாகவேண்டாம்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

இறுதியாக திரு. அமிர்தலிங்கம் பேசுகையில்; ரேப்றெக்கோடருடன் நின்ற இளைஞர் ஒருவர் ''உண்ணாவிரதம் ஏன் நடத்துகிறீர்கள்?'' என்று கேள்விஎழுப்பினார். அதற்கு அமிர் பதிலளித்தார்.

''தமிழ் மக்களின் அச்சத்தை ஒழிக்கவும் ஆட்சியாளரின் அக்கிரமத்தை எதிர்க்கவுமே வடக்கு, கிழக்கில் அமைதியான அகிம்சைவழிப் போராட்டத்தை நடத்த முடிவுசெய்துள்ளோம்.

''கடந்தவருடம் ஜூலை 24ம் திகதி சேந்தான்குளம் இராணுவமுகாமிலிருந்து புறப்பட்டவர்கள் சென்றவழி எல்லாம் அப்பாவி மக்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள் பலர் உயிரிழந்தனர்.

''25ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் குட்டிமணி தங்கத்துரை, ஜெகன் உட்பட 52 வீரத் தியாகம்புருஷர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

''ஜனாதிபதி உலகமெலாம் விஜயம் செய்து, இலங்கையில் இனப்பிரச்னை இல்லை, பயங்கரவாதிகள் தான்பிரச்னை என்று சொல்லி எங்களையும், இந்தியாவையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பார்க்கிறார்.

''உண்ணாவிரதப் போராட்டத்தால் தமிழீழம் கிடைக்குமென்று சொல்லமுடியாது. இளைஞர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தினால்தான் பெற்றுக்கொள்ளமுடியும்.''

திரு. அமிர்தலிங்கம் தனது பேச்சை முடித்துக்கொண்டதும், வீரமாகாளி அம்மன் ஆலயவாசலுக்கு ஆதரவாளர்களினால் அழைத்துச் செல்லப்பட்டார். இளைஞர்களும் பின் தொடர்ந்து சென்றனர்.

அப்பொழுது 3-30 மணியிருக்கும். ஆலயத்தின் மேற்குப்பக்கமாக, அதிர்ச்சிமிக்கப் பேரிடி முழக்கத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

ஆலயத்தில் திரு. அமிர்தலிங்கம் வணங்கிய பின்னர், அவரது ஆதரவாளர்கள் சுற்றிவர நின்று கொண்டு வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த காருக்கு அழைத்துச் சென்றனர்.

இங்கு உண்ணாவிரதமிருந்தவர்களுக்குச் சம்பிரதாய பூர்வமாகக் குளிர்பானம் வழங்கி முடித்து வைக்காதது குறிப்பிடத்தக்கது. (மா)

## கூட்டணி நிலைமையில் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேசிய கூறாக இருக்கின்றது அதனிலும் பெரிதான கூறு எதனையும் [மாகாண அல்லது பிரதேசகூறு] உருவாக்கவேண்டியதில்லை ஆயின்அவசியமான கட்டுப் பாடுகளுக்குட்பட்டு தேவையான, நன்குவரையறுக்கப்பட்ட செயற்பாட்டுத் துறைகளில் மாவட்டங்களுக்கிடையில் ஒத்துழைப்பை அல்லது தொழிற்பாட்டை அனுமதிக்கவேண்டும் என்னும் அடிப்படையான நெகிழ்சியுற்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்ளாதவராகும். மாகாண அல்லதுபிரதேச அடிப்படையில் தொழிற்பட வேண்டும்என்று அதன்சொந்த நன்மைகருதி கோருவதுநியாயமாகாது. அந்தக்கோரிக்கை உண்மையான தேவைகளின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன் அனுமதிக்கப்பட்ட விதிவிலக்குகள் அவ்வாறான உண்மையான தேவையுடன் தொடர்புடையவையாகவும் இருத்தல்வேண்டும்.

### இரண்டாவது மன்றப் பிரேரனை

1. 25 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களைக் கொண்ட இரண்டாவது மன்றம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

2. இரண்டாவது மன்றத்தின் கருமங்கள், அதிகாரம், அமைப்பு ஆகியனபற்றிக் கலந்தாலோசிக்கப்படவேண்டும். ஒரு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்ட சபைக்கும் இருவர் என்ற அடிப்படையில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யப்படவேண்டும்.

3 இரண்டாவது மன்றில் இருந்து மந்திரிசபை அந்தஸ்துள்ள அமைச்சர்களையும், பந்திரி சபை அந்தஸ்தில்லாத அமைச்சர்களையும் ஜனாதிபதி தெரிவு செய்வார்.

4. அவர்கள் தாம் கடமையாற்றும் மாகாணங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

5. இந்த அமைச்சர்களின் கடமைகள் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும்,

### அமைப்பு

1. ஒவ்வொருமாவட்டமும் இரண்டு [தேர்ந்தெடுக்கப்பட்ட]உறுப்பினர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படவேண்டும். மொத்தம் 50 பேர்.

2. (அ) ஏனைய உறுப்பினர்கள், உதாரணமாக 25 பேர் ஜனாதிபதியாலும், பாராளுமன்றத்தாலும், உயர் சபைகளாலும் நியமிக்கப்படவேண்டும். இந்த எண்ணிக்கையில் மொத்த எண்ணிக்கை தொடர்பாக முக்கியத்துவம் அற்றதாக இருக்குமளவிற்கு மிகக்குறைவாக இருத்தலாகாது. அல்லது அது மிக்க செல்வாக்குடையதாக இருக்குமளவிற்கு அதிக கூடுதலானதாகவும் இருத்தலும் ஆகாது.

(ஆ) அத்தகைய உறுப்பினர்கள் பொதுவாழ்வில் பிரபல்யமானவர்கள் அல்லது நாட்டிற்கு சிறந்த சேவைசெய்தவர்கள் அல்லது சேவைசெய்யத்தக்க ஆற்றலுடையவராயிருத்தல் அல்லது நாட்டின் சமயக் குழுக்கள், உயர்தொழில்கள், வியாபார நலன்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக் கழகங்கள், கல்விக்கலைகள், ஆகியதுறைகளின் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து நியமிக்கப்படவேண்டும்.

### உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

(1)ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய முக்கிய இரண்டு பிரதிநிதிகளையும் வாக்காளர்களால் அல்லது தேர்தல் சபையால் [அல்லது ஏனைய தெரிவு செய்யும் சபையால்] ஒரு மாகாணமட்டத்தில் தேர்ந்தெடுப்பது ஒரு முறையாகும். தெரிவு செய்யும் சபை எதுவாக இருப்பினும், ஒரு மாகாணமட்டத்தில் நடைபெறும் தேர்தல் விரும்பிய பயனை அடைய முடியாது செய்து விடும். ஏனெனில் ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படுவர் அந்த மாவட்டத்தில் தானே போதுமான ஆதரவு பெறுதவராக இருக்கலாம். [மேலும் அந்தமாவட்டத்தால் முற்றாக அவர் ஏற்றுக்கொள்ளப்படாதவராகவும் இருக்கலாம்]

[2] மாவட்டத்தால் மட்டும் மாவட்டத்தின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது இரண்டாவது முறையாகும் [இந்த முறையானது அமெரிக்காவிலும். இந்தியாவிலும் நிலவும் தேர்தல் முறையினை அடியொற்றியது]

(மிகுதி நாளை)

## மட்டுநகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுநகர் நீதிமன்றத்துக்கு முன்பாக இந்தவிற்பனவு நிலையம் அமைந்துள்ளது நிலையத்தின் முகாமையாளர் எஸ். நவரத்தினம் வங்கிக்கு கொண்டு செல்வதற்கு தயாரானபோது இந்தக் கொள்ளை நடந்தது.

துப்பாக்கியோடுநிலையத்துக்குள் நுழைந்த இரு இளைஞர்கள் முகாமையாளரிடமிருந்து ரொக்கப்பணத்தைப் பறித்துச்சென்றனர்.

இந்த இரு இளைஞர்களும் சைக்கிளில் தப்பிச்சென்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஊர்வாய்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் திரை நீக்கம் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். இதைக்கேட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் 'ஏன், இங்கிலாந்திலே சேர் வின்ஸ்டன் சேச்சிலின் படம் அவர் பிரதமராக இருந்த காலத்திலே திரை நீக்கம் செய்யப்பட்டது உமக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கிறிஸ்தவ சமய சமுதாய ஆய்வு நிலையத்தின் ஆதரவில் பேராயர் டி. ஜே. அம்பலவாணர் 'மலேசியாவில் திருச்சபை' என்னும் பொருளில் கருத்தரங்கு கொன்றை நடத்துவார்.

இக்கருத்தரங்கு வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மருதனமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.